மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே,

தலைமைச் செயலக வளாகத்தின் உணவு விடுதிகளைச் சுற்றி தேங்கிக் கிடக்கும் சாக்கடை நீரை சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்தின் மூலம் அவ்வப்பொழுது அகற்றப் பட்டு வருகிறது.

திரு. பி. காளியப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, உணவு விடுதிகள் மிகவும் தரக்குறைவாகவும், அசுத்தமாகவும் உள்ளன. அவற்றை சுகாதார முறைப்படி நடத்த அரசு உத்தர விடுமா?

(9-55)

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, புனித ஜார்ஜ் கோட்டை இந்திய இராணுவ கட்டுப்பாட்டில் உள்ளது. இந்தக் கோட்டைக் கழிவுநீர் பாதாள சாக்கடை வெகு காலத்திற்கு முன்பு அமைக்கப்பட்டதாகவும் இதனைச் சுத்தப்படுத்த 14,10,700 ரூபாய்க்கு முதலில் இராணு வத்தின் பொறியாளர்கள் மதிப்பீடு தயார் செய்து 50 விழுக்காடு மாநில அரசாங்கத்தை கோரினார்கள். மாநில அரசாங்கம் 7,05,350 ரூபாய் தொகையை முதலில் வழங்கியது. மீண்டும் அவர் கள் மறு மதிப்பீடு தயாரித்துக் கூடுதலாக 2,05,000 ரூபாய் மாநில அரசாங்கம் செலுத்த வேண்டும் என்று கேட்டார்கள். 13—7—1989-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் தொகையையும் அனுமதித்து வழங்கியிருக்கிறார்கள். இந்தப் பணியை இராணுவத் துறையைச் சேர்ந்த பொறியாளர்கள் விரை வில் மேற்கொண்டு சுத்தப்படுத்த நடவடிக்கை எடுப்பார்கள்.

காளிங்கராயன் கால்வாயைச் சீரமைத்தல்.

* 2089 திரு. ஏ. கணேசமூர்த்தி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காளிங்கராயன் கால்வாயை சீரமைப்பு செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) காளிங்கராயன் வாய்க்காலை சீரமைப்பு செய்ய வேண்டுமென்று கலைஞர் தலைமையில் அமைந்த கழக அரசு 1974 ஆம் ஆண்டு ஒரு திட்டம் தீட்டி அந்தப் பணிக்காக ரூ. 60 இலட்சத்தையும் ஒதுக்கீடு செய்தது. இத்தொகையில் பெரும் பகுதி செலவு செய்து பல பணிகளை நிறைவேற்றியிருக்கிறது. என்றாலும் இத்திட்டத்தின் முக்கிய பணியான மதகுகளைச் சீரமைக்கும் பணி இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. காரணம் இப்பணியைத் தொடங்கும்போது விவசாயிகளிடையே மதகுகளைச் சீரமைப்பதற்கு பலத்த எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே அந்தப் பணி அப்படியே நிறைவேற்றப்படாமல் நிற்கிறது.

தாமல் கிராமத்து ஏரியை ஆழப்படுத்தி, கால்வாய்க்கு சிமெண்ட் பூசுதல்.

* 2117. **திரு. பொ. முருகேசன் :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காஞ்சீபுரம் நகராட்சியின் குடிநீர் பற்றாக்குறையை போக்கும் வகையில் அப்பகுதியில் உள்ள தாமல் கிராமத்து ஏரியை ஆழப் படுத்தவும், அதன் வரத்துக் கால்வாய்க்கு சிமெண்ட் பூசவும் அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

தாமல் ஏரியில் பாசனத்திற்குத்தான் போதிய அளவு நீர் இருக்கிறது. அதிலிருந்து தண்ணீரைக் குடிநீருக்கு எடுப்பதற்குப் போதிய அளவிற்கு நீர் இல்லாத காரணத்தால் காஞ்சிபுரம் நகராட்சிக்கு குடிநீர் பற்றாக்குறையைப் போக்க தாமல் ஏரியிலிருந்து நீர் எடுக்க இயலவில்லை.

திரு. பொ. முருகேசன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டிருந்த கேள்வி தாமல் ஏரியிலிருந்து குடிநீருக்காகத் தண்ணீர் எடுக்க வேண்டும் என்பதல்ல. தாமல் ஏரி என்பது காஞ்சிபுரம் தொகுதியிலே மிகப் பெரிய ஏரியாகும். அந்த ஏரி